**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2023**

**P103 இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு: பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. புதுக்கவிதையின் பாடுபொருள் யாது?
2. மரபுக்கவிதை என்பதற்கு விளக்கம் தருக.
3. கும்மி என்பது என்ன?
4. பாரதிதாசனின் இயற்கைப் பாடல்களின் தொகுப்பு யாது?
5. கல்யாணசுந்தரம் பாட்டில் சின்ன பயலுக்கான அறிவுரைகள் யாவை?
6. நாமக்கல் கவிஞரை தேசியக்கவிஞராக அறிமுகப்படுத்திய பாடல் எது?
7. அப்துல் ரகுமான் தன் எழுது கோலை உடலில் எந்த உறுப்பாகக் கூறுகிறார்?
8. மகாகவியின் குறும்பாக்களில் பாடப்பட்டுள்ள சமூகச் சிக்கல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. தத்துவக்கருத்தை உணர்த்தும் சிற்றிலக்கியத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு தருக
10. இசை நாடக சிற்றிலக்கிய வகைகளுக்கு இரண்டு சான்றுகள் தருக.
11. தமிழ் மொழியில் தோன்றிய முதல் தூது நூல் எது?
12. சரபேந்திர பூபால குறவஞ்சியில் வரும் தலைவியின் பெயர் யாது?
13. அந்தாதி நூல்கள் இரண்டினைக் கூறுக?
14. திருமாலின் தொப்புளில் தோன்றிய தாமரையிலிருந்து தோன்றியவர் யார்?
15. பள்ளு இலக்கியத்தின் வேறு பெயர்கள் யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. புதுக்கவிதைக்கும் மரபுக்கவிதைக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைக் கூறுக.
2. அப்துல் ரகுமான்– குறிப்பு வரைக.
3. சிற்பியின் 'நாய்க் குடை' என்ற கவிதை கூறும் பொருண்மை யாது?
4. கவிமணிக்குக் குழந்தை கவிஞர் எனப் பெயர் வரக் காரணம் என்ன?
5. உலாவின் அமைப்பு முறை பற்றி எழுதுக.
6. அறப்பளீசுர சதகத்தின் பாடுபொருள் யாது?
7. திருக்காவலூர் கலம்பகத்தில் 'சமூக உல்லாசம்' என்ற உறுப்பின் சிறப்புகளைப் புலப்படுத்துக.
8. தமிழ்விடு தூது நூலில் தமிழ் மொழியின் 12 பருவங்களாகக் கூறப்படுவன யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

**1.** (அ) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் பெண் விடுதலை சிந்தனைகளை விளக்குக.

**2.** (அ) பிச்சமூர்த்தி கவிதையில் 'கிளிக்கூண்டு' கவிதையின் பொருண்மையை விளக்கி உரைக்க.

(அல்லது)

(ஆ) அப்துல் ரகுமானின் பித்தன் கவிதை சுட்டும் பொருள் ஆழத்தைப் புலப்படுத்துக.

**3.** (அ) சிற்றிலக்கியத்தின் தோற்றமும் அதன் வகைகளையும் விவரிக்க

(அல்லது)

(ஆ) தமிழ்விடு தூதில் தமிழின் சிறப்புகள் எவ்வாறெல்லாம் வெளிப்பட்டு சிறக்கின்றன என்பதைப் புலப்படுத்துக.

❋❋❋